**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 159 of 2022**

Prosecution witness LW3 (PW3) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 17.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.சௌந்திரி | Father's Name | : | திரு.முத்துராமன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1 to A2 present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் சக்கில்நத்தம் அடுத்த சமத்துபுரத்தில் குடியிருக்கிறேன் . சமத்துபுரத்தில் மளிகை கடை வைத்துள்ளேன் . ராஜசேகர் எனக்கு உறவினர் இல்லை. 4 வருடங்களுக்கு முன்பாக என்னுடைய கடைக்கு காலை 11.00 மணிக்கு மூன்று பேர்கள் கடைக்கு வந்து தண்ணீர் , டம்பளர் , ஊருக்காய், சிகிரேட் ஆகியவற்றை வாங்கினார்கள் . பெரிய இருசக்கர வாகனத்தில் அந்த மூன்று பேர் வந்தார்கள் . வண்டியின் பதிவு எண் தெரியாது. வண்டியின் கலர் ஞாபகமில்லை . தற்போது நீதிமன்றத்தில் அன்றைய தினம் கடைக்கு வந்த மூன்று நபர்களில் , இரண்டு நபர்கள் உள்ளார்கள். இரண்டு நாட்கள் கழித்து அந்த மூன்று நபர்களில் ஒரு நபர் இறந்துவிட்டதாக சொல்லி என்னை விசாரித்தார்கள். அந்த மூன்று பேரும் தபால் மேட்டு பக்கம் இருந்து வண்டியில் வந்தார்கள் , பொருட்களை வாங்கிக்கொண்டு தீர்த்தகிரிபட்டி நோக்கி அதே வண்டியில் போனார்கள் . போலீசார் விசாரித்தபோது மேற்கண்ட தகவலை போலீசாரிடம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.17 16:10:26 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 159 of 2022**

Prosecution witness LW2 (PW2) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade-I B.C., on date 17.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.தாமோதிரன் | Father's Name | : | திரு.முருகன் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1 to A2 present.**

**<u>முதல் விசாரணை:</u>**

நான் திருப்பத்தூர் மாவட்டம் மண்டநாயனகுண்டா அஞ்சல் , பத்திரிகானூர் என்ற ஊரில் வசிக்கிறேன் . என் மனைவி பெயர் சுகந்தி , மகன் பெயர் சசிதரன், நான் கூலி வேலை செய்கிறேன். நான் அரசு மதுபான கடைகளில் 10-15 மது பாட்டில்களை வாங்கி யார் கேட்கிறார்களோ அவர்களுக்கு காசு வாங்கிக்கொண்டு கொடுப்பது வழக்கம் . அந்த அரசு மதுபானக் கடை தபால் மேடு என்ற இடத்தில் உள்ளது . அவ்வாறு மதுபாட்டில்களை கடையில் வாங்கும்போது அதனை களனியில் ஒழித்து வைத்து கேட்பவர்களுக்கு கொடுப்பேன். சுமார் 4 வருடங்களுக்கு முன்பாக ஒரு நாள் மூன்று பசங்க வந்து என்னிடம் பணம் கொடுத்து இரண்டு பாட்டில் கேட்டார்கள், டைமண்ட் ரம் அவர்களுக்கு கொடுத்தேன் . அந்த மூன்று பேரில் இரண்டு நபர்கள் தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்கள் . அந்த மூன்று பேர்கள் ரூ.500 ரூபாய் பணத்தை என்னிடம் கொடுத்தார்கள். அவர்களுக்கு சில்லறை மிஞ்சம் எவ்வளவு கொடுத்தேன் என்பது

ஞாபகமில்லை அவர்கள் வந்தபோது காலை 11.00 மணி இருக்கும். அவ்வாறு வந்தவர்கள் சரக்கை வாங்கிக்கொண்டு வண்டியில் போய்விட்டார்கள் .அது நடந்து இரண்டு நாட்கள் கழித்து போலீசார் வந்தார்கள் வந்தபோலீசார் என்னை போலீஸ் ஸ்டேசனுக்கு அழைத்துப்போனார்கள் . அவர்கள் காவல் நிலையத்தில் ஆஜர் எதிரிகளை காண்பித்து இவர்களுக்கு சரக்கு கொடுத்தீங்களா என்று கேட்டார்கள், நான் அவர்கள் சரக்கு கொடுத்தேன் என்று சொன்னேன். இரண்டு பாட்டில் கொடுத்தேன் என்ற விவரத்தை போலீசாரிடம் சொன்னேன். நான் மது கொடுத்த மூன்று பேர்களில் ஒரு நபர் இறந்துவிட்டதாக என்னிடம் சொன்னார்கள் . இறந்துபோனவர் பெயர் எனக்கு தெரியாது. போலீசார் இது சம்பந்தமாக என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.17 16:10:33 +0530

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT COURT,**

KRISHNAGIRI

**Session Case No. 159 of 2022**

Prosecution witness LW1 (PW1) Chief

Solemnly affirmed sworn by **Tr.R.Mohan** Grade–I B.C., on date 17.02.2026 in accordance with provisions with the Act of 1873.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | திரு.குப்புசாமி | Father's Name | : | திரு.ஆறுமுகம் |
| Village | : | | Taluk | : | |
| Calling | : | | Age | : | |

**A1 to A2 present.**

**முதல் விசாரணை:**

நான் திருப்பத்தூர் மாவட்டம் கந்திலி கிராமத்தில் , அம்பேத்கர் காலனியில் வசித்து வருகிறேன் . நான் மெக்கானிக்காக பணிபுரிந்து வருகிறேன். என் அம்மா பெயர் இலட்சுமி, என் அக்கா பெயர் முனியம்மாள், என் தங்கச்சி பெயர் முருகம்மாள் , தம்பி பெயர் ராஜசேகர் . என் அக்கா முனியம்மாளை ஈஸ்வரதாசரப்பள்ளியை சேர்ந்த முருகன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்தோம். என் தம்பி ராஜசேகர் சொந்தமாக டாடா ஏஸ் வண்டி ஓட்டி வந்தார் . என் தம்பி ராஜசேகர் டாடா ஏஸ் வண்டிக்கு சரியாக பைனான்ஸ் கட்டாத காரணத்தினால் வண்டியை எடுத்துக்கொண்டு போய் விட்டார்கள். அதன்பிறகு என் தம்பி ராஜசேகர் ஈஸ்வரதாசரப்பள்ளியில் தங்கியிருந்து பெயின்டர் வேலைக்கு போய் வந்தார்.

நான் பழனியில் பணிபுரிந்து சொந்த ஊரான கந்திலிக்கு 02.04.2022 தேதியில் ஊருக்கு வந்திருந்தேன் . என் அம்மா தம்பி அக்கா வீட்டில் தங்கி வேலை செய்துக்கொண்டு இருப்பதாக என்னிடம் சொன்னார்.

06.04.2022 அன்று காலை 8.30 மணிக்கு ஊராட்சி மன்ற தலைவரான பிரபு என்பவர் எனக்கு போன் செய்து என் தம்பி இறந்து போய்விட்டதாகவும் தீர்த்தகிரிபட்டி ஏரியில் வைத்து இறந்துபோய் இருப்பதாகவும் தகவல் சொன்னார். நான் அன்றைய தினம் காலை 9.00 மணிக்கு தீர்த்தகிரிபட்டி ஏரிக்கு போய் இருந்தேன் . நான் போய் பார்த்தபொழுது என் தம்பி தீர்த்தகிரிபட்டி ஏரியில் கருவேலமரத்தின் அடியில் செத்து கிடந்தார் . அவருக்கு மூக்கிலும், வாயிலும் இரத்தம் வந்திருந்தது.

என் தம்பியின் பேன்டின் வலதுபுற பாக்கேட்டில் ஒரு பிராந்தி பாட்டில் இருந்தது. அந்த பிராந்தி பாட்டிலில் பிராந்தியும் கொஞ்சம் இருந்தது. இது சம்பந்தமாக காலை 10.00 க்கு பருகூர் காவல் நிலையம் சென்று நான் புகார் கொடுத்தேன். எனக்கு எழுதப்படிக்க தெரியாது என் மாமா ராஜேந்திரன் புகாரை எழுதினார் அதில் நான் கையெழுத்து போட்டு கொடுத்தேன். தற்போது காண்பிக்கப்படும் புகாரிலுள்ள கையெழுத்து என்னுடையது தான் . புகார் **அ.த.சா.ஆ.1** ஆகும். அதன்பிறகு போலீசார் 09.04.2022 தேதி என்னை விசாரித்தார்கள். போலீசார் என்னிடம் திருப்பதி , முருகன் ஆகியோர் என் தம்பி ராஜசேகரை கொலை செய்ததாக என்னிடம் சொன்னார்கள் . என் அண்ணன் நாகராஜ் மனைவி சத்யாவை என் தம்பி வைத்துக்கொண்டு இருந்ததாக கூறி அதனால் கொலை நடந்ததாகவும் ஊரில் இருப்பவர்கள் சொன்னார்கள். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள் . தற்போது ஆஜரில் இருக்கும் எதிரிகள் திருப்பதி மற்றும் முருகன் தான் இந்த கொலையில் சம்பந்தப்பட்ட நபர்கள் ஆவார்கள்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை : இல்லை</u>**

VASUDEVAN DAMODARAN

Digitally signed by VASUDEVAN DAMODARAN
Date: 2026.02.17 16:10:39 +0530